**ஜா-எல நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜா-எல நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஜா-எல நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் விரிவான முகாமைத்துவ அறிக்கையில் பின்வரும் இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.1 (இ), 1.2.2, 1.2.3, 1.2.4, 1.2.5 (அ), 1.2.6, 2.2.2, 3.2 (ஆ) மற்றும் 3.4(ஆ)

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 18.7 மற்றும் LGD/10A/4/ந.கி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலக்கம் 6.3 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | இலக்கம் 18.4 இன் பிரகாரம் அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியில் ஆரம்பமான 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் நிலையான சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவினங்கள், மானிய பெறுவனவுகளில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலுத்துதல்கள், மிகையில் இனங்கண்ட மானியமாக கழித்து சேமிப்பு தேறிய சொத்து / உரிமை மூலதனத்தின் கீழான மிகையில் இனங்காணப்படாமல் மானியத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டி இருந்ததுடன் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்ட அடிப்படை விரிவான வருமானக் கூற்றில் நாட்குறிப்பின் மூலம் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் மீண்டெழும் வருமான செலவினமாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 16,438,272 தொகையான மூலதன நிதியுதவி பணம் அவ்வாறு கணக்கீடு செய்யப்படாமல் பொது வைப்புக் கணக்கு ஊடாக பெறுவனவு கொடுப்பனவு கணக்கில் கொண்டு வரப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | நியமத்தை நோக்காகக் கொண்டு விரிவான விடயங்களை உள்ளடக்கி EG 3.2 இன் பிரகாரம் வீதிகள் மற்றும் மதகுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதி விடயங்கள், ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் கீழ் தனியான கணக்கீட்டு குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 29,567,827 | வேலை விடயங்களின் பொது வைப்புக் கணக்கில் பட்டியலிடப்பட்டிருந்தமையினால் இந்தத் தவறு ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள், மதகுகள் மற்றும் வடிகாண்கள் அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஊ) | நியமங்களை நோக்காகக் கொண்டு விரிவான கொடுப்பனவுகளை உள்ளடக்கிய EG 3.2 இன் பிரகாரம் நடைமுறை மூலதன வேலைகள் இருக்குமாயின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பட்டோலையில் தனியான ஒரு மூலமாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 13 நடைமுறை வேலைகளின் பெறுமதியான ரூபா 9,303,837 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டு முதல் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | -மேற்படி- |
| (எ) | இலக்கம் 9 மற்றும் 10 இன் பிரகாரம் மாற்றல் கொடுப்பனவுகளின் வருமான செலவினங்கள் மற்றும் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் வருமான செலவினங்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யவேண்டியிருந்த போதிலும் சபையின் சகல வருமானங்களும் ரூபா 154,960,889 மாற்றல்களின் கொடுக்கல் வாங்கல்களில் கிடைத்த வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு முதல் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | -மேற்படி- |

**1.6.2 கணக்கீட்டுக் கொள்கை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 3.2 கொள்கையின் கீழ் கணனி மென்பொருட்கள் சொத்தாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,497,500 தொகையான மனிதவளங்களுக்கான கணனி மென்பொருள் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | கணக்கீட்டு கொள்கையின் சரியான பெறுமானத் தேய்வு வீதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலக்கம் 3.5 கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் நிலையான சொத்துக்களை தொகுதிகளாக்குதல் மற்றும் பெறுமானத்தேய்வு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமையினால் பெறுமானத்தேய்வு பெறுமதி நடப்பாண்டில் கணக்கீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |

## 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 12,998,400 தொகையான கம்பெக்டர் வண்டிக்காக உள்ளூராட்சித் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது முத்திரைக் கட்டண வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 1,810,000 தொகைக்காக உரிய கணக்கில் வரவு வைக்காமையினால் கடன் கணக்கு பெறுமானத்தினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 02 முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 2,000,000 கடன்கொடுத்தோர் ஒதுக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,499,900 செலவில் அவற்றைக் கொள்வனவு செய்யும் போது கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்காமையின் காரணமாக கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,000,000 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 414,515 தொகையான 04 வேலைக் கடன்கொடுத்தோர் மீதிகள் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டத்திற்குரிய ரூபா 500,000 தொகையான கடன்கொடுத்தோர் மீதி மற்றும் செலுத்த வேண்டிய தொகையை விட அதிகரித்து காண்பிக்கப்பட்ட ரூபா 6,426,450 தொகையான 13 கடன்கொடுத்தோர் மீதிகள் வேலைக் கடன்கொடுத்தோர் மீதியில் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் ரூபா 7,340,965 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்யும் போது மொத்த முத்திரைக் கட்டண பெறுமதியை வாகன கடனுக்காக உள்ளுராட்சித் திணைக்களத்திலிருந்து கழிக்கப்பட்ட கடன் தவணைப் பணமான ரூபா 2,896,000 தொகை குறைக்கப்பட்டதன் பின்னர் தேறிய தொகை வருமானத்தில் கணக்கீடு செய்யப்பட்டமையினால் அப்பெறுமதியினால் ஏனைய வருமானம் குறைத்தும் கடன்கொடுத்தோர் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | சபையின் நிலையான வைப்புக்களில் ரூபா 15,823,669 தொகை நடைமுறைக் கணக்கில் மாற்றப்பட்டு அதில் மீண்டும் முதலீடு செய்யப்பட்ட ரூபா 823,669 தொகை முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான பணமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் மீண்டும் முதலீடு செய்யப்பட்டிருந்த பணம் நடைமுறையல்லா முதலீடாகவும் கணக்குகளில் செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 1,949,338 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விட மேலதிக வருமானம் ரூபா 41,081,341 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரி<br>மீளாய்வாண்டின் போது ரூபா 1,177,685 தொகையான 101 ஆதன வரி அலகுகளில் எழுத்துமூல கோரிக்கையின்றி பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் | அறவிடப்பட்டுள்ள கட்டணத்தின் அளவு குறைவாக உள்ளது என்பதை அறியத் தருகின்றோம். | சரியான கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆதனவரி பதிவேட்டில் இலக்கம் 01 மற்றும் 09 பிரிவுகளுக்குரிய வணிக ஆதனவரி அலகுகள் 192 இல் 94 வியாபாரங்கள் அல்லது அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. சனநெருக்கடிமிக்க பிரதேசமான இந்த பிரிவுக்கு அண்மித்த பகுதியில் மாத்திரம் 774 வெற்றுக் காணி அலகுகள் காண்பிக்கப்பட்டு வருடாந்த ஆதனவரி கட்டணமாக ரூபா 30 இற்கும் குறைவான தொகை அறவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) வாடகை<br>-------------- | | |
| மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 இன் திகதியின்றிய LGD/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் உப வாடகைக்கு வழங்கும் போது மாதாந்த வாடகை போல 60 மடங்கிற்கு குறையாத பெறுமதியொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 35 கடைகளை உப வாடகைக்கு வழங்குவதற்காக விருப்பம் தெரிவிக்கப்பட்டிருக்கும் போதும் மற்றும் அதற்கு தேவையான பிரதம அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் உப வாடகைக்கு வழங்கும் முறைமை 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக சபைக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 1,470,576 ஆகும். இந்த வருமானம் இழக்கப்பட்டமை பழைய கடை வாடகையின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் புதிய மதிப்பீடு 2018 மே 25 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும் 2020 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உப வாடகையாளர்களினால் கடைகளை உப வாடகைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் மூலம் அறிவித்திருந்த போதிலும் அவர்கள் அதற்கு முன்வராததுடன் தற்போது வரையில் அதற்காக முன்வந்திருந்த இரண்டு பேர்களுக்கு மாத்திரம் உப வாடகை கையளித்தல் மேற்கொண்டு உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட படி கையளித்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாய் சேய் சிகிச்சை நிலையக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த நிறுவனத்துடன் 2011 யூன் 08 ஆந் திகதி ரூபா 15,079,593 தொகையில் உடன்படிக்கை செய்யப்பட்டு 2011 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையில் காணப்பட்ட சிக்கலான நிலைமையின் காரணமாக அத்திவாரம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு மிகுதி வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.<br>செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக 20 சதவீத முற்பணமாக ரூபா 3,015,919 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 இன் பிரகாரம் வேலைக்காக இந்த முற்பணத் தொகை செலுத்தும் போது பெறப்பட வேண்டிய ஏற்றுக் கொள்ளக் கூடிய காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வேலை இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் போதும், ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலையின் பெறுதியான ரூபா 2,291,530 தொகை செலுத்திய முற்பண தொகையினை விட ரூபா 724,389 மேலதிகமாக செலுத்தப்பட்டமையினால் முற்பணத்திற்காக பிணை முறியொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் களிடமிருந்து அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 அனுமதியற்ற நிர்மாணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதான வீதி இலக்கம் 124 இல் நிர்மாணிக்கப்பட்டு கொண்டிருக்கின்ற மூன்று மாடிக் கட்டிடம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய இரண்டு வீதிகளுக்கிடையில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பு வீதி மத்தியிலிருந்து 45 அடி நீளம் மற்றும் புதிய கொழும்பு வீதி மத்தியிலிருந்து 19 அடி 06 அங்குலம் தூரத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கட்டிடத்திற்குரிய எல்லையினை மீறும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து 20 வருடங்களை விட பழைய தரை மாடிக் கட்டிடத்தில் உள்ள 7 கடைகள் ஆதனவரிக்காக அப்பதிவேடுகளிலில் உள்ளமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 02 ஆவது மாடிக்காக தூண்கள் மற்றும் தட்டுக்களை அமைத்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் விண்ணப்பங்களில் குறைபாடுகள் காண்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை சரி செய்யாதிருந்தமையினால் அந்த அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சபையினால் புறக்கணிக்கப்பட்டிருந்தது. | பரீட்சிக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையில் சேவையாற்றியிருந்த உத்தியோகத்தருக்கு 2020 சனவரி 01 ஆந் திகதி முதல் ஜா-எல பிரதேச சபைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்ததுடன் 09 சந்தர்ப்பங்களின் போது அவரினால் பெறப்பட்டிருந்த ரூபா 205,000 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி, சேவையிலிருந்து விடுவிப்பதற்கு முன் தீர்த்து வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உரிய உப கட்டுநிதி 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயலாளரின் 2019 திசெம்பர் 31 ஆந் | இந்த உத்தியோகத்தரால் தீர்த்து வைக்கப்படாத பணத்தை தீர்த்து வைப்பதற்கான ஆலோசனை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | தீர்த்து வைப்பதற்கும் தீர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதிய கடிதத்தின் பிரகாரம் உத்தியோகத்தரின் உரித்தில் காணப்பட்ட நிலுவை கடமை விபரங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் முறையாக கையளிக்கப்படாமல் உரிய உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டிருந்தார். மேலும் அந்த உத்தியோகத்தரினால் கையாளப்பட்டிருந்த பொருட்கள் வழங்கல் விடயங்களுக்குரிய இனங்காணப்பட்ட 27 விடயங்களுக்காக தீர்க்கப்படாதிருந்த பட்டியல்கள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அவை 2021 மார்ச் 31 ஆந் திகதி வரை செலுத்தி தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது. | | |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலக செயற்பாடுகளை கணனிமயப்படுத்தும் நோக்கில் ரூபா 4,575,000 செலவில் ஆதன வரி செலுத்துதல் மற்றும் வருமான முகாமைத்துவத்திற்காக கணனி மென்பொருளொன்று 2019 செப்தெம்பர் 17 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இணையத்தளமொன்றின் ஊடாக ஆதனவரியை செலுத்தும் முறைமையின் வசதிக்காக ரூபா 650,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அதில் செயல் முன்னேற்றம் காணப்படவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி வடிவமைத்தல், குறுஞ்செய்திகளை அமுல்படுத்துதல் தொடர்பாக முன் அவதானிப்புக்கள் மேற்கொண்டு தேவையான குறைபாடுகளை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் எதிர்வரும் 05 வருடங்களுக்காக மென்பொருள் முறைமைக்குரிய, விற்பனையின் பின்னர் சேவை வழங்குதல் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இந்த மென்பொருள் முறைமை முழுமையான செயற்பாட்டு நிலைக்கு உட்படுத்தாதிருக்கும் போது சம்பளம் மற்றும் மனிதவள முகாமைத்துவத்திற்காக மென்பொருள் முறைமையொன்றை | நிறுவனத்தின் செயற்திறனை மேலோங்கச் செய்யும் நோக்கில் மனிதவள முகாமைத்துவ தொகுதியொன்று விரைவாக தாபித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | குறைபாடுகளை இனங்கண்டு சரியாக அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியில் 50 சதவீதமான ரூபா 1,497,47 தொகை 2020 யூன் 29 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் முறைமையில் குறைபாடுகளை சரிசெய்து கொள்ளாமல் புதிய மென்பொருள் முகாமைத்துவ முறைமைக்காக உடன்படிக்கை செய்தமை பிரச்சினைக்குரியதாக இருந்தது.

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொடி வாய்க்கால் வீதியில் பக்க சுவரை நிர்மாணிப்பதற்காக 06 கட்டங்களின் கீழ் இரண்டு சங்கங்களுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த பக்க சுவரின் நீளம் 853 மீற்றராகவும் நில மட்டத்தின் உயரத்திற்கு 2 அடி 7 அடி 6 அங்குலம் மற்றும் நில மட்டத்திற்கு கீழ் கொங்கிறீட் நிர்மாணிக்கப்பட்டு ரூபா 14,156,879 தொகை செலுத்தப்பட்டிருந்தது. நில மட்டத்திற்கு கீழான பகுதியில் 4 கட்டங்களில் 3 கட்டங்கள் 2021 சனவரி 19 ஆந் திகதி பௌதீக ரீதியில் அளவிடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் இறுதிக் கொடுப்பனவு அறிக்கை மற்றும் பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அளவுகளில் ஈடுபடுத்தப்பட்ட கொங்கிறீட் அளவில் வேறுபாடுகள் 95.18 கியூப் கொங்கிறீட்டுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 4,102,304 தொகையாகும். இது IV மற்றும் V கட்டங்களுக்காக அளவிடை செய்யப்படாமல் ஒரே சமமான தொகையொன்று 02 சங்கங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.1 ஏற்பாடுகளுக்கு புறம்பாக 02 சங்கங்களுக்கு ரூபா 02 மில்லியனை விஞ்சி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | பக்க சுவர் இறுதியில் உள்ள கருங்கல் சுவருக்காக மாத்திரம் கொங்கிறீட் இற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சரியான அளவிடை அறிக்கைகள் தயாரித்துக் கொள்ளாமையின் காரணமாக 3’7’’ அங்குல நீள அளவொன்றுக்கு மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். | சரியான அளவீடுகளை பெற்று கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரமும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |